Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

09.05.2020 சனிக்கிழமை




## ஒரேநாளில் அதிகூடிய பி.சி.ஆர் பரிசோதனை!

கொழும்பு,மே 9
இலங்கையில் ஒரே நாளில் ஆயிரத்து 821 பி.சி.ஆர் பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட அதிகூடிய பி.சி.ஆர் பரிசோதனை இதுவாகும் என்று சுகாதார சேவை

2

# அரசை நடத்த பணம் இல்லை



கொழும்பு, மே 9
கொரோனா காரணமாக இலங்கைக்கு வருமானம் கிடைக்கும் பிரதான வழிகள் முடங்கியுள்ளன. இதன் காரணமாக அரசை நடத்திச் செல்வதற்கே பணம் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. அரச துறைகளை நடத்துவதற்கு சர்வதேசக் கடன்களை வாங்க வேண்டிய நிர்ப்பந்தமே இருக்கின்றது.

2

அமைச்சர் பந்துல அதிர்ச்சி தகவல்

## 'பார்'களுக்கு தொடர்ந்தும் மூடுவிழா

கொழும்பு,மே 9
எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த ஊரடங்கை அரசு தளர்த்தினாலும், மதுபான விற்பனை நிலையங்களைத் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. கொரோனா வைரஸ் தொற்று மேலும் பரவும் அபாயம் இருப்பதால், மதுபானசாலைகளைத் திறப்பதனால் அத

2

## ஊரடங்கு அடுத்த மாதமே முழுமையாக தளர்த்தப்படும்?

கொழும்பு,மே 9
கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவை அடுத்த மாதமே முழுமையாகத் தளர்த்தப்படும் என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். எதிர்வரும் 11 திகதி அன்று கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப்படவுள்ளதுடன், சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி மக்கள் தங்கள் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நடவடிக்கை

2

## கொரோனாவை தடுப்பது மக்களின் கைகளிலேயே!

அரச மருத்துவ அதிகாரிகள் கருத்து

கொழும்பு, மே 9
நாளை மறுதினம் முதல் ஊரடங்கை தளர்த்துவதற்கு அரசால் தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும், இலங்கையில் கொரோனாவால் ஏற்படும் ஆபத்து இன்னும் குறையவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் பொறுப்புப்பற்றுச் செயற்படுவார்க

2

மாகாணத்துக்குள்ளான

## போக்குவரத்துக்கு பாஸ் தேவையில்லை

யாழ்ப்பாணம், மே 9
ஊடரங்கு தளர்த்தப்பட்ட பின்னர் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்கு பாஸ் தேவையில்லை என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார். ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் போக்குவரத்துச் சேவை கட்டுப்பாடுகளுடன் இடம்பெறும். மாகாணங்

2

## நேற்றிரவு 11 பேருக்கு கொரோனா தொற்று!

கொழும்பு, மே 9
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 11 பேர் நேற்றிரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர். நேற்றிரவு 11.45 மணியளவில் தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா

2



## ஊரடங்குத் தளர்வால் ஏற்படும் விளைவுக்கு மக்களே பொறுப்பு

இப்படிச் சொல்கிறது சுகாதாரத் திணைக்களம்



கொழும்பு, மே 9
கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டே நாட்டில் ஊரடங்கு தளர்த்தப்படுகின்றது. இது ஒரு பரீட்சார்த்த முயற்சி மட்டுமே. இந்தச் சூழலை தவறாகப் பயன்படுத்தினால் மக்கள் மீண்டும் கொரோனா யுகத்துக்குள் தள்ளப்படுவர் என்று எச்ச

2

## நிலநடுக்கம்

கொழும்பு, மே 9
இலங்கைக்கு தெற்கே இந்தி யப் பெருங்கடலில், இன்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை நேரப்படி இன்று காலை 6.44 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 5.5 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையத்தின் தகவல்கள் கூறுகின்றன. இந்த நிலநடுக்கத்தால், இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,5)

## தனிமைப்படுத்தலில் 298 பேர் விடுவிப்பு

கொடிகாமம்,மே 9
கொடிகாமம் கெற்பேலியில் அமைந்துள்ள 522 படையணியின் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 298 பேர், அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்ல இன்று சனிக்கிழமை அனுமதிக்கப்பட்டனர். கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் வாழைத்தோட்டம் ஆகிய பகுதிகளிலிருந்து அழைத்து வரப்பட்ட 188 ஆண்களும், 110 பெண்களும் முகாமில் தங்க

2

## ஒரேநாளில் அதிகூடிய...

கள் பணிப்பாளர் நாயகம்
வைத்திய கலாநிதி அனில்
ஜயசிங்க தெரிவித்தார்.
நேற்று அடையாளம் காணப்
பட்ட கொரோனா தொற்றா
ளர்களில் 11 பேரும் கடற்ப
டையைச் சேர்ந்தவர்கள்
என்றும் அவர் குறிப்பிட்டார்.
அதேவேளை, தனிமைப்படுத்
தப்பட்டுள்ள கொழும்பு
பண்டாரநாயக்க மாவத்தை,
நாராஹேன்பிட்டி தாபர
மாவத்தை ஆகிய பகுதிகள்
விரைவில் விடுக்கப்படும்
எனவும் அவர் தெரிவித்துள்
ளார். (க-44)

## 'பார்'களுக்கு...

னைக் கட்டுப்படுத்த முடி
யால் போய்விடுமென
அச்சம் வெளியிடப்பட்டுள்
ளது. அதேவேளை மதுபா
னங்களை 'ஒன்லைன்' மூலம்
விற்பனை செய்ய சில
தரப்புகள் அரசிடம்
கோரிக்கை விடுத்துள்ளன
என்று அறியமுடிகிறது.(க)

## போக்குவரத்துக்கு

களுக்கு இடையில் போக்குவ
ரத்துச் சேவை நடத்தப்படும்.
மாகாணத்தினுள் ஒரு மாவட்
டத்திலிருந்து மற்றொரு
மாவட்டத்துக்குச் செல்வதற்கு,
சுகாதார மருத்துவ அதிகாரி
யின் சான்றிதழ் அல்லது பொலி
ஸாரின் அனுமதி எதுவும் தேவை
யில்லை, என்று மாவட்டச்
செயலர் குறிப்பிட்டார். (ஓ,5)

## அரசை நடத்த...

இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவைப்
பேச்சாளருமான பந்துல குணவர்த்தன
தெரிவித்துள்ளார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று
முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற
பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கேற்று
கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்
டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வருமான வரி முழுமையாக முடங்கி விட்
டது. மதுபான விற்பனை ஊடாக
திறைசேரிக்கும் கிடைக்கும் வருமானம்
நின்று விட்டது. ஏற்றுமதி இறக்குமதிகள்
மூலமாகக் கிடைக்கும் வரிகளும் நின்று
விட்டன. அரச நிதிப் பற்றாக்குறை
காரணமாக அரசு பெரும் நெருக்கடி
யைச் சந்தித்து வருகின்றது. ஏற்றுமதியில்
அதிக வருமானத்தை ஈட்டித் தந்த ஆடை
உற்பத்தித் துறை முழுமையாக
வீழ்ச்சியடைந்துள்ளது. அதேபோல்
சுற்றுலாத்துறை மூலமாக இலங்கைக்கு
கிடைத்த வருமானமும் நின்றுவிட்டது.
வெளிப்படையாகக் கூறுவதாயின்
அரசிடம் பணம் இல்லை. அரச ஊழியர்
களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவ
தற்கே அரசு மிகப்பெரிய சவாலை
எதிர்கொள்கின்றது. சர்வதேச கடன்
களைக் கட்டாயம் பெறவேண்டிய
நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. நாட்டில்
மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி
ஏற்பட்டுள்ள அதேவேளை சர்வதேசக்
கடன் இன்னொரு பக்கம் எம்மை
நெருக்கியுள்ளது. இந்த ஆண்டுக்கான
சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர்
கடன் மற்றும் வட்டி செலுத்த வேண்டி
யுள்ளது. அரசாக நாம் அடுத்த கட்ட
இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெ
டுக்க வேண்டியுள்ளது- என்றார். (ஓ,5)

## கொரோனாவை தடுப்பது.....

ளாயின் மேலும் ஆபத்தான
நிலைமையை நோக்கியே செல்ல
வேண்டும்.
இவ்வாறு அரச மருத்துவ அதிகாரி
கள் சங்கத்தின் மத்திய குழு உறுப்
பினரும், சிறுவர் மருத்துவமனை
யின் செயலருமான மருத்துவ
நிபுணர் வாசன் இரத்தினசிங்கம்
தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பொருளாதாரம் வீழ்ச்சிய டைந்
துள்ள நிலையில் ஊடரங்குத்
தளர்வு தொடர்பான தீர்மா
னங்கள் எடுக்கப்படாவிட்டால்
எதிர்காலத்தில் மக்களுக்கு உண
வுப் பற்றாக்குறை, வாழ்வாதாரப்
பிரச்சினை என்பன ஏற்படலாம்.
ஆயினும் இலங்கையில் உயிர்ப்
பான நோயாளர்களின் எண்
ணிக்கை அதிகமாகும். உயிர்ப்
பான நோயளர்கள் எனப்படுபவர்
கள் வைரஸை இலகுவாகக் காவக்
கூடிய நோயாளர்களாவர்.
வைரஸ் தொற்று ஏற்பட்ட ஒருவர்
அதிலிருந்து முழுமையாகக்
குணமடைந்தால் அவர் உயிர்ப்
பான நோயாளர் அல்ல. இலங்கை
யில் உயிர்ப்பான நோயாளர்கள்
அதிகமாகக் காணப்படுகின்ற
மையே ஆபத்தானதாகும்.
திங்கட்கிழமை முதல் தனியார்
துறைகள் ஆரம்பிக்கப்பட்டாலும்
30 வீதமானவர்களையே பணியில்
ஈடுபடுத்துமாறு நிறுவனப் பிரதா
னிகளுக்கு முன்னரே அறிவுறுத்தப்
பட்டுள்ளது. சேவை இடங்களில்
மக்கள் கூடுதல் போன்றவற்றை
தவிர்த்துக் கொள்ளுமாறும்
அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இதேவேளை தொழிலுக்குச் செல்ப
வர்கள் தவிர்ந்த வீடுகளில் இருப்
போர் அநாவசியமாக வெளியிடங்
களுக்குச் செல்வதைத் தவிர்த்துக்
கொள்ள வேண்டும்.
நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்
டுள்ளோர், நீரிழிவு நோயாளர்கள்,
உயர் குருதி அழுத்தம் உடையவர்
கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்
இவ்வாறு தேவையற்ற முறையில்
வெளியிடங்களுக்குச் செல்வதைத்
தவிர்த்துக் கொள்வது அத்தியாவசி
யமானதாகும்.
ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்
டாலும் சுகாதார நடைமுறைகளை
இறுக்கமாகக் கடைபிடிக்க வேண்
டியது அவசியமாகும். காரணம்
வைரஸால் ஏற்படும் ஆபத்து
இன்னும் குறையவில்லை. ஆனால்
வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்
குள் உள்ளது. நோய்
முகாமைத்துவம் கட்டுப்பாடாக
முன்னெடுக்கப்படுகின்றது. இந்நி
லைமை எதிர்காலத்தில் தொடர்வ
தும் வைரஸ் தாக்கத்தைக் குறைத்
துக் கொள்வதும் மக்கள் கைகளி
லேயே உள்ளது.
பொது மக்கள் பொறுப்பற்ற
விதத்தில் செயற்படுவார்களானால்
ஏற்படும் ஆபத்தைக் குறைக்க
முடியாது, என்றார். (ஓ,5)

## ஊரடங்கு அடுத்த மாதமே...

களும் எடுக்கப்பட்டுள்ளன. அதன்
பிரகாரம் மே 11 க்குப் பின்னர் ஏற்
பட்ட முன்னேற்றத்தைப் பொறுத்து
ஜூன் மாதத் தொடக்கத்தில் அனைத்
துக் கட்டுப்பாடுகளையும் மொத்தமாக
நீக்குவதற்கு அரசாங்கம்
தீர்மானித்துள்ளது என அமைச்சர்
ஒருவரை மேற்கோளிட்டு ஆங்கில ஊட
கம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
மார்ச் 11 அன்று கொரோனா வைர
ஸால் பாதிக்கப்பட்ட முதல் இலங்கை
யர் அடையாளம் காணப்பட்டார்.
அதனை அடுத்து கொரோனா நோயா
ளிகளின் எண்ணிக்கை அதிகரித்த
பின்னர் மார்ச் மாதத்தில் அரசாங்கம்
ஊரடங்கு உத்தரவுவை விதித்தது.
கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட
பெரும்பாலான நாடுகள் தமது வணிகச்
செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பித்
துள்ள நிலையில், இலங்கை அரசாங்க
மும் மீண்டும் பொருளாதார நடவடிக்
கைகளை ஆரம்பிக்க தீர்மானித்
துள்ளது என்றும் செய்தியில் குறிப்பி
டப்பட்டுள்ளது. (க)

## தனிமைப்படுத்தலில்...

வைக்கப்பட்டிருந்தனர்.
17 நாள்கள் தனிமைப்படுத்த
லில் இவர்கள் இருந்த நிலை
யில், கொரோனா தொற்று
இல்லை என உறுதிப்படுத்தப்
பட்டு, சான்றிதழ்களுடன்,
சொந்த இடங்களுக்குச்
செல்ல அனுமதிக்கப்பட்ட
னர். (க-159,20,159)

## நேற்றிரவு 11....

தொற்றியவர்களின் எண்ணிக்கை 824
இலிருந்து 835 ஆக அதிகரித்துள்ளது.
நேற்று கொரோனா வைரஸ் தொற்றிய
11 பேர் அடையாளம் காணப்பட்ட
னர் எனவும், அவர்கள் அனைவரும் வெலி
சறை கடற்படை முகாமைச் சேர்ந்த
வர்கள் எனவும் இராணுவத்தளபதி
சவேந்திர சில்வா தெரிவித்தார். (எ22)

## ஊரடங்குத் தளர்வால்.....



ரித்துள்ளார் சுகாதாரப் பணிப்பா
ளர் மருத்துவர் அனில் ஜசிங்க.
இது தொடர்பில் அவர் மேலும்
தெரிவித்ததாவது:
மக்களின் வாழ்க்கை முறைமையை
வழமைக்கு திருப்ப வேண்டும் என்ற
வேண்டுகோள் அரசால்
விடுக்கப்பட் டுள்ளது. எனினும்
வழமை போன்று முழுமையாக
மக்களை நடமாட இடமளிக்க
முடியாது. அதிகளவில் கட்டுப்பாடு
கள் விதிக்கப்பட்டு அத்தியாவசிய
தேவைகளை மாத்திரம் பூர்த்தி
செய்யக்கூடிய வகையில் முதல்
கட்டமாக நடவடிக்கை
முன்னெடுக்கப்படு கின்றது.
மிகவும் அச்சுறுத்தல் என்று கருதிய
மேல்மாகாணம் தவிர்ந்து ஏனைய
மாகாணங்கள் ஏற்கனவே
விடுவிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு
தளர்த்தப்பட்ட நேரங்களில்
இதுவரை மக்கள் எவ்வாறு கடந்த
இரு வாரங்களாக செயற்பட்டனரோ
அதேபோன்று தொடர்ந்தும்
செயற்பட வேண்டும்.
அதேபோல் மேல்மாகாணத்தில்
அதிக நிறுவனங்கள் இயங்க வேண்
டிய கட்டாயம் இருப்பதால்
கட்டுப்பாடுகள் அதிகம்
விதிக்கப்பட்டு விடுவிக்கப் படுகின்
றது. ஜனாதிபதியுடன் நேற்றுக்
காலையில் பேச்சு நடத்தியதுடன்
வர்த்தமானி அறிவித்தல் விடுக்கும்
போது உள்வாங்கப்படவேண்டிய
விடயங்களை அறிவுறுத்தியுள்
ளோம். உடனடியாக வர்த்தமானி
அறிவித்தலை வெளியிடத் தீர்மா
னிக்கப்பட்டுள்ளது.
இதில் முற்றுமுழுதாக வியாபார,
வர்த்தக நடவடிக்கைகளை முன்
னெடுக்க மட்டுமே இடமளிக்கப்
பட வேண்டும். மக்களை அநாவசி
யமாக நடமாட இடமளிக்க
முடியாது. ஆனால் இந்தக் கட்டுப்
பாடுகள் வெகு விரைவில் முழுமை
யாகக் கைவிடப்படும்.
ஆனால் நீண்டகாலத்துக்கு நாம்
சுகாதார நடவடிக்கைகளை முன்
னெடுக்க வேண்டும். தூய்மை,
சமூக இடைவெளி என அனைத்தை
யும் நாம் தொடர்ந்து நடைமுறைப்
படுத்த வேண்டும். நாட்டை
விடுவிக்கும் நிலையில் மீண்டும்
கொரோனா பரவும் வாய்ப்பு
உள்ளது.
இது நகர்ப்புறங்களில் அதிகம்
தாக்கும். மக்கள் இதனை நன்கு
உணர்ந்து கொண்டு நாளாந்த
செயற்பாடுகளை முன்னெடுக்க
வேண்டும். கொழும்பு நகர்ப்புறங்
கள் பாதிக்கப்படும் அதிக வாய்ப்பு
கள் உள்ளது. எனவே கொழும்பு
வாழ் மக்கள் மிகவும் அவதானமாகச்
செயற்பட வேண்டும். ஒரு சிலர்
விடும் தவறுகள் காரணமாக
மீண்டும் நாடே முடக்கப்படும்
வாய்ப்புகளும் ஏற்படலாம் என்ற
அச்சுறுத்தலை விடுத்துக்கொண்டே
நாட்டில் ஊரடங்கை தளர்க்கவும்
நடவடிக்கை எடுக்கின்றோம்.
ஊரடங்கு தளர்த்தப்பட்டு நாள்கள்
கடக்கும் சந்தர்ப்பங்களில் மீண்டும்
வைரஸ் தாக்கம் குறித்த அச்சுறுத்
தல் அதிகரிக்கும். எமக்கு மட்டும்
அல்ல உலகில் அனைத்து நாடுக
ளுக்கும் இந்த நெருக்கடி ஏற்படு
கின்றது.
எனவே வயதானவர்கள், நோயாளர்
கள் அதிகம் கவனம் செலுத்தப்பட
வேண்டும். சமூக பரவலில் மீண்
டும் தாக்கப்பட்டால் வயதானவர்
கள் இறக்க நேரிடலாம்.
இத்தாலி, அமெரிக்கா மற்றும்
ஏனைய ஐரோப்பிய நாடுகளில்
உயிரிழப்பு வீதம் அதிகரிக்க
இதுவே காரணமாகும். எனவே
எமது சுகாதார அதிகாரிகள் சமூக
பரவலைத் தடுக்க கடுமையான
நடவடிக்கை எடுக்கின்றனர்.
நெருக்கடியிலும் எமது வாழ்க்
கையை கொண்டு நடத்தவே இந்த
சவாலை முன்னெடுக்கின்றோம்-
என்றார். (ஓ,5)

# 'கொரோனா' ஒழிப்பில் புலிப் பல்லவி எதற்கு?

## அரசிடம் சஜித் அணி கேள்வி

கொழும்பு, மே 9
கொரோனா விவகாரத்திலும் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் அரசு புலிப் பல்லவி பாடிவருகின்றது. புலிகளுக்கு எதிரான போரும், கொரோனா ஒழிப்புச் சமரும் இருவேறுபட்ட விடயங்கள் என்பதை அரசு புரிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று 'உதயனிடம்' தெரிவித்தது.
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சிகள் புறக்கணித்திருந்தன. எதிரணிகளின் இந்தச் செயற்பாட்டை கடுமையாக விமர்சித்துவரும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள், சுனாமி அனர்த்தத்தின் போது புலிகள் மனித நேய அடிப்படையில் செயற்பட்டனர். அவர்களிடம் இருந்த அந்த பண்புகூட எதிரணி உறுப்பினர்களிடம் இல்லை எனவும் சுட்டிக்காட்டி வருகின்றனர்.
இந்நிலையில் இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அஜித் மானப்பெருமவிடம் வினவியபோது, அவர் தெரிவித்ததாவது:
புலிகள் காலத்தில் நிலவிய போர் போல கொரோனா விவகாரத்தை பார்க்க முடியாது. கொரோனா வைரஸ் பரவினால் நோயாளிகளை குணப்படுத்தி மருத்துவ ரீதியிலான செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு எமது நாட்டில் சிறந்த மருத்துவர்களும், சுகாதார துறையினரும் இருக்கின்றனர். எனவே, அவர்களிடமிருந்துதான் அரசு ஆலோசனை பெறவேண்டும். மாறாக எம்மிடம் இருந்து அல்ல. எனினும், மக்களுக்கு உரிய வகையில் நிவாரணங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றனவா, கொடுப்பனவுகள் உரிய வகையில் வழங்கப்படுகின்றனவா போன்ற நிதிசார் விடயங்கள் குறித்து அவதானம் செலுத்த வேண்டியது எமது பொறுப்பாகும். இவை குறித்து கலந்துரையாடுவதற்கு நாடாளுமன்றமே சிறந்த இடமாகும். இதன்காரணமாகவே சபையைக் கூட்டுமாறு வலியுறுத்தினோம். அலரிமாளிகை கூட்டத்துக்கு சென்றிருந்தால் அங்கு பிரதமர் எத்தகைய கருத்தையும் வெளியிடக்கூடும். அவற்றை அதிகாரப்பூர்வ அறிவிப்பாக கருதமுடியாது. சிலவேளை போலியான தரவுகளைக்கூட வெளியிட முடியும். அத்தகைய சந்திப்பில் பங்கேற்பது பயனுடையதாக அமையாது. ஆனால், நாடாளுமன்றத்தில் அவ்வாறு செயற்படமுடியாது. அறிவிப்பொன்று விடுக்கப்பட்டால் அது ஹன்சாட்டில் வெளிவரும். அதில் சட்டபூர்வமான தன்மை இருக்கின்றது. இதற்காகவே இவ்விவகாரங்களை நாடாளுமன்றத்தில் கலந்துரையாடி தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு நாம் தயாரானோம். இதற்கு அரசு உடன்பட மறுக்கின்றது. அதேபோல் புலிகளின் பிரச்சினையும், கொரோனா வைரஸ் தொற்றும் ஒன்றல்ல. எனவே, எதை யாவது கூறி தப்பிக்க முயற்சிக்கும் கைங்கரியத்தை அரசு கைவிட வேண்டும் - என்றார். (ஒ,5,44)

# மக்கள் பின்பற்றவேண்டிய 10 அறிவுறுத்தல்கள்

## சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரனால் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 9
நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் ஊரடங்கு தளர்த்தப்படுவதன் காரணமாக பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்களை வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வெளியிட்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நாட்டின் பொருளாதாரத்தையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் ஊரடங்கு உள்ளிட்ட பல கட்டுப்பாடுகளில் தளர்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆயினும் நாட்டில் கொரோனா பரம்பல் அபாயம் நீங்கிவிடவில்லை என்பதனை பொதுமக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். மக்களை மிகவும் விழிப்புடனும் அவதானத்துடனும் பின்வரும் நடைமுறைகளினைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
1) வேலைக்குச் செல்வோர் அத்தியாவசிய விடயங்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்ய வெளியே செல்வோர் தவிர்ந்த ஏனையோர் வீட்டிலேயே இருந்து ஒத்துழைப்பு வழங்குமாறு மீண்டும் வலியுறுத்துகின்றோம்.
2) அத்தியாவசிய தேவைகளுக்கு வெளியே செல்பவர்கள் தாம் செய்ய வேண்டிய வேலைகளுக்காக அடிக்கடி வெளியே செல்லாது ஒரே தடவையில் பல கருமங்களை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியவகையில் திட்டமிட்டு செயற்படவும்.
3) வெளியே செல்பவர்கள் அலுவலகங்களிலும் பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் பொதுப்போக்குவரத்தின் போதும் இரண்டு பேருக்கு இடையில் ஆகக் குறைந்தது 1 மீற்றர் தூர இடைவெளியைப் பேணவும்.
4) வெளியில் செல்லும்போது இயன்றளவு பிரத்தியேகப் போக்குவரத்து முறைகளைப் பாவிக்கவும். (உதாரணமாக நடந்து செல்லல், துவிச்சக்கர வண்டியில் செல்லல்).
5) அலுவலகங்கள் வர்த்தக நிலையங்கள் பொது இடங்கள் என்பவற்றுக்கு உள்ளே நுழையும் முன்னர் கைகளை சவர்க்காரமிட்டு முறைப்படிக் கழுவிக் கொள்ளவும்.
6) வெளியில் சென்று விட்டு வீடு திரும்பிய பின்பும் கைகளை சவர்க்காரமிட்டு முறைப்படி கழுவிக்கொள்ளவும்.
7) காய்ச்சல், இருமல், தொண்டைநோய் போன்ற அறிகுறிகள் உள்ளவர்கள் பொது இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.
8) ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் பொது நிகழ்வுகள் வைபவங்கள், கூட்டங்கள் மற்றும் கேளிக்கை நிகழ்வுகள் போன்றவற்றுக்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்பதை மனதில் கொள்ளவும்.
9) இயன்றளவு வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுகளையே உண்பதனை பழக்கப்படுத்திக் கொள்வதுடன் உணவகங்களில் இருந்து உணவைப் பெறவேண்டி இருப்பின் உணவை எடுத்துச் சென்று உட்கொள்ளவும்.
10) உங்கள் பிரதேசத்துக்கு யாராவது புதியவர்கள் வருகை தந்திருந்தால் உங்களது பகுதி சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுசுகாதார பரிசோதகர் அல்லது கிராம அலுவலருக்கு அறியத் தரவும். அவர்களை தொடர்பு கொள்வதில் சிரமம் இருப்பின் வடமாகாண சுகாதார திணைக்களத்தின் அவசர அழைப்பெண் 0212226666 க்கு தகவல் வழங்கவும் -என்றுள்ளது. (ஒ,5)

# தனிமைப்படுத்தலை மீறினால் 2 ஆண்டுகள் கடூழியச் சிறை!

## வழிகாட்டல்கள் அடங்கிய விசேட வர்த்தமானி நாளை வெளியாகும்



கொழும்பு, மே 9
தனிமைப்படுத்தல் சட்டத்தின் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.
இதன்படி இந்தச் சட்டத்தை மீறும் நபருக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடும் என பொலிஸ் சட்டப்பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரி வித்துள்ளார்.
தனிமைப்படுத்தல் சட்டம் உட்பட ஊரடங்கு தளர்வின்போது நடந்துகொள்ளவேண்டிய விதம் பற்றி விபரிக்கும் வர்த்தமானி அறிவித்தல் சுகாதார அமைச்சால் நாளை ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படவுள்ளது.
கொரோனா வைரஸ் வேகமாக பரவக்கூடிய அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்த கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நாளை மறுதினம் திங்கட்கிழமை அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் செயற்படவுள்ளன. அதற்கான வழிகாட்டல்களும் வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டிருக்கும். எவ்வித பாதிப்பும் இன்றி நாட்டை கட்டம் கட்டமாக இயல்பு நிலைக்கு கொண்டுவரும் நோக்கிலேயே புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படுகின்றது என்று சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஒ,5,44)



### இயல்புநிலை திரும்புகிறது என்றாலும்

# அவசியமெனில் மட்டுமே வெளியே வரவேண்டும்!

## மாவட்டச் செயலர் மகேசன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு மாதங்களின் பின்னர் இயல்புநிலை திரும்புகின்றது என்றாலும், பொதுமக்கள் அத்தியாவசிய சேவைக்கு மாத்திரமே வீடுகளிலிருந்து வெளியே வரவேண்டும். ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் கொரோனா ஆபத்து இன்னமும் நீங்கவில்லை என்பதை மக்கள் மனதிலிருத்த வேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் சேவைகளை வழமைக்கு கொண்டு வருதல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இதன் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாம் இன்னமும் அவதானமாக இருக்க வேண்டிய காலகட்டத்தினுள் செல்கின்றோம். வேறு இடங்களிலிருந்து ஆள்கள் வரக் கூடும். இயல்புநிலைக்குத் திரும்புவ தாக இருந்தாலும் மக்கள் அத்தியாவசிய தேவைக்கு மாத்திரமே வீட்டுக்கு வெளியே வரவேண்டும். பொதுப் போக்குவரத்து, வர்த்தகர்கள், சிகை அலங்கரிப்பாளர்கள், உணவக உரிமையாளர்கள் சுகாதார நடைமுறையை பின்பற்றி பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வண்ணம் தமது அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்-என்றார். (ஒ,5)

# ஊரடங்குச் சட்டம் ஒருபுறம் மணற்கொள்ளை மறுபுறம்

கிளிநொச்சி, மே 9

நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மணல் கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

அந்தப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களின் மேற்பகுதியை அத்துமீறி அகழ்ந்தே மணல்கொள்ளை இடம்பெறுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. விவசாய நிலங்கள் 6 அடி ஆழம்வரை தோண்டப்பட்டு, அந்த மணல் வெளிமாவட்டங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. பல காலமாக இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்று வந்த நிலையில், ஊரடங்கு வேளையும் அது தொடர்கிறது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. மீண்டும் அந்த இடத்தில் விவசாயம் செய்வதானால், பல லட்சம் ரூபா செலவு செய்து, காணிகளுக்குள் மண் பறிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே இந்த விடயம் தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து, விவசாய நிலங்களில் மணல் அகழும் இந்தச் செயற்பாடுகளைத் தடுப்பதற்குரிய வழிவகை களை ஏற்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ஐ-113)





## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 9

சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு நேற்று ஐயனார் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது 31 குருதிக்கொடையாளர்கள் கலந்துகொண்டு குருதித்தானம் செய்தனர். (ஐ-23)



## காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி

### இளைஞர்களால் பெண் மடக்கிப் பிடிப்பு

மட்டக்களப்பு, மே 9

காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண் ஒருவர் இளைஞர்களால் சுற்றிவளைக்கப்பட்டு பிடிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேசத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடைப் பகுதியில் இடம்பெற்றது.

திக்கோடை காட்டுப்பகுதியில் சந்தேகத்துக்கு இடமான மனிதர்களின் நடமாட்டத்தை அவதானித்த இளைஞர்கள் இரகசியமான முறையில் சுற்றி வளைத்து குறித்த பெண்ணையும், கசிப்பு உற்பத்தி செய்த இடத்தையும் பிடித் துள்ளனர். சம்பவம் தொடர்பில் வெல்லா வெளி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸாரிடம் குறித்த பெண்ணையும், கசிப்பு உற்பத்திக்கான பொருள்களையும் இளைஞர்கள் ஒப்படைத்தனர். (ஐ-46)

## இறுதிச் சடங்கு செய்ய அனுமதிக்க வேண்டும்

### சஜித் தெரிவிப்பு



கொழும்பு, மே 9

அன்பிற்குரியவர்களை இழப்பது எவருக்கும் மிகப்பெரிய சோகமாகும். அத்தகைய துயரம் நிறைந்த சமயத்தில் எவ்வித பாரபட்சமுமின்றி அவர்களது இறுதிச்சடங்குகளை மேற்கொள்ள அனுமதிப்பது அனைவரதும் பொறுப்பாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு மனிதாபிமான சமுதாயத்துக்கு இன்றியமையாத இத்தகைய தார்மீக நெறிமுறைகளையும் விழுமியங்களையும் நிலைநிறுத்த எம்மால் முடியாது போனால் இனவெறி ஆழமாக வேரூன்றி, இன மதப் பாகுபாடு, ஓரங்கட்டல் என்பவற்றின் காரணமாக நாம் தோல்வியடைந்த தேசமாகி விடுவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)



திருமதி வளர்மதி பரமநாதனின் 31ஆம் நாள் நினைவாக 'தமிழ் விருட்சம்' அமைப்பின் ஊடாக வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு தொற்று நீக்கி மருந்து தெளிகருவி வழங்கப்பட்டது. (க)

## குருநாகல் போதனாவின் பணிப்பாளர் இடமாற்றம்

குருநாகல், மே 9

குருநாகல் போதனா மருத்துவமனையின் பணிப்பாளரை சுகாதார அமைச்சு உடனடியாக இடமாற்றம் செய்துள்ளது.

குருநாகல் பிரதான மருத்துவமனையின் பணிப்பாளராகக் கடமையாற்றிய மருத்துவர் சரத் வீர பண்டாரவே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். சுகாதார அமைச்சின் செயலாளர் கையொப்பமிட்ட எழுத்து மூலமான இடமாற்றக் கடிதம் அவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த மருத்துவமனையின் பதில் பணிப்பாளராகப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சந்தன கெதன் கமுவ நியமிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவர் வீரபண்டார கொரோனா தொற்று விடயம் தொடர்பில் சரியான முறையில் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அவரது அனைத்துச் செயற்பாட்டு நடவடிக்கைகளிலும் கணிசமானவர்கள் அவருக்கு எதிராக செயற்பட்டுள்ளனர். இந்த முறைப்பாடு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுவதற்காக இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# இன ரீதியான பாரபட்சத்துக்கு மனோகணேசனும் கண்டனம்

கொழும்பு, மே 9

கொரோனாவினால் மரணிக்காத முஸ்லிம் பெண்ணின் உடல் முறைதவறித் தகனம் செய்யப்பட்டமைக்குக் கவலை வெளியிட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் மனோகணேசன், நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் இன ரீதியான பாரபட்சத்தைக் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

இது குறித்து மனோகணேசன் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது;

கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றால் மரணிக்காத, கொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த ஓர் இஸ்லாமிய இலங்கைத் தாயின் உடல் முறைதவறித் தகனம் செய்யப்பட்டமைக்காக ஒரு இலங்கையன் என்ற வகையில் வேதனையடைகிறேன். முஸ்லிம் சமூகத்தின் மீதான இந்த இன ரீதியான பாரபட்சத்தைக் கண்டித்து, இந்த நடவடிக்கைக்கு எதிராக எனது நிலைப்பாட்டைப் பகிரங்கமாக வெளிப்படுத்துகின்றேன்- என்றுள்ளது. (ப)



# தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிக்குக

## கரு ஜயசூரிய வலியுறுத்து

கொழும்பு, மே 9

தற்போதைய நெருக்கடி நிலையில் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் எழுச்சியடைய வேண்டுமாயின், வணிகங்கள் மற்றும் கைத்தொழிற்சாலைகள் தமது செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இது வரை காலமும் நாடு முடக்கப்பட்டிருந்த நிலையில் வணிகச் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு



நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கரு ஜயசூரிய அவரது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் கூறியிருப்பதாவது:

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுமார் 50 நாள்களுக்கு மேலாக நாடு முடக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது மக்கள் தமது அன்றாடச் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு காத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தவொரு வருமானமுமின்றி வீடுகளுக்குள் அடைபட்டிருப்பது உடலியல் மற்றும் உளவியல் ரீதியாக மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும்.

தற்போதைய நெருக்கடி நிலையின் மத்தியில் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் எழுச்சியடைய வேண்டுமாயின் வணிகங்கள் மற்றும் கைத்தொழிற்சாலைகள் தமது செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க வேண்டும் - என்றுள்ளது. (ப)

AMNESTY INTERNATIONAL

# ஹிஸ்புல்லா தடுத்து வைப்பு: உடனடி நடவடிக்கை தேவை

## சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவிப்பு

கொழும்பு, மே 9

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் தடுத்துவைப்பு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளின்றி 18 மாதங்களுக்கும் அதிகமான காலம் ஒருவரைத் தடுத்து வைப்பதென்பது சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பானதாகும் என்றும் சுட்டிக் காட்டியிருக்கிறது.

கடந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்ட குண்டுதாரிகளுடன் தொடர்பினைப் பேணியதாகக்கூறி கடந்த மாதம் 14 ஆம் திகதி சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைது செய்யப்பட்டார். எனினும் இதுவரையில் அவர் விசாரணைகளின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் வெளியிட்டிருக்கிறது.

இதுதொடர்பில் மேலும் கூறியிருப்பதாவது:

ஒருவரை வழக்கு விசாரணைகளின்றி 18 மாதங்களுக்கும் அதிகமான காலம் தடுத்து வைப்பதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் அனுமதியளிக்கிறது. இது சர்வதேச சட்டங்களுக்கு முரணானது என்பதுடன், சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமைக்கும் எதிரானதாக அமைகிறது. விசாரணைக்கு முன்னதான தன்னிச்சையான தடுத்து வைப்பு என்பது உரிய சட்ட வரையறைகளுக்கு அமைவாக பல்வேறு காரணிகளைக் கருத்திற்கொண்டே மேற்கொள்ளப்படலாம். எனவே சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் தடுத்துவைப்பு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. (ப)

# முஸ்லிம்களுக்கு ஆதரவாக பிமல் ரத்நாயக்க 'டுவிட்'

கொழும்பு, மே 9

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்ட பாரபட்சம் காட்டப்படுவதைச் சுட்டிக்காட்டி ஜேவிபியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க டுவிட்டரில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

கொரோனா வைரஸால் உயிரிழந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் இறுதிக்கிரியைகளின் படத்தையும், முஸ்லிம் பெண் ஒருவரின் உடலிற்கு இறுதி மரியாதை செய்யப்படும் படத்தையும் வெளியிட்டு இரு தாய்மார்களின் பிரியாவிடை என பிமல் ரத்நாயக்க இந்தப் பதிவைச் செய்துள்ளார்.

'ஜனாதிபதி அவர்களே இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பான கௌரவமான வாழ்க்கையை உங்களால் உறுதிப்படுத்த முடியாவிட்டாலும், தயவு செய்து அவர்களுக்கும் கௌரவமான இறுதிச் சடங்கினை உறுதி செய்யுங்கள்' என அவர் குறிப்பிட்டுள்ளார். முஸ்லிம்களுக்கு எதிரான திட்டமிடப்பட்ட பாரபட்சம் என்பது பௌத்த போதனைகளுக்கு முரணானது என ஜேவிபியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (ஐ)

# சுற்றிவளைப்பில் நால்வர் கைது

கொழும்பு, மே 9

கல்கிஸ்ஸ, மொரந்துட்டுவ மற்றும் ஜாஎல ஆகிய பகுதிகளில் பொலிஸார் முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளின் போது சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடாக்களுடன் இளைஞர்கள் இருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொல்கொட ஆற்றுப்பகுதியில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளின்போது மதுபான வடித்தலுக்காகப் பயன்படுத்தும் கோடாக்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கல்கிஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து 4 இலட்சத்து 20 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவும், மதுபான வடித்தலுக்காகப் பயன்படுத்தும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை மொரந்துட்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸார் முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளின்போது 10 இலட்சத்து 32 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கோடாவுடன், 55 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஜாஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொஸ்வத்த வனப்பகுதியில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போது சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடாவுடன் இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஜாஎல பகுதியைச் சேர்ந்த 25, 26 ஆகிய வயதுடைய இளைஞர்கள் இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இவர்களிடமிருந்து 2 இலட்சத்து 36 ஆயிரத்து 250 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம், 9 இலட்சத்து 84 ஆயிரத்து 375 மில்லி லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ப)

# பொருள்கள் கொள்வனவின்போது கட்டாயம் கவனிக்க வேண்டியவை

கொடிகாமம், மே 9

நடமாடும் விற்பனையாளர்களிடமிருந்து அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் மற்றும் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடைப்பிடிக்கப்பட வேண்டிய விடயங்களாக குடும்பத்தில் ஒருவர் மட்டும் (ஆரோக்கியமான இளம் வயதினர் ) செல்லுங்கள், உங்களுக்கென்ற பையை அல்லது கூடையை எடுத்துச் செல்லுங்கள், உங்கள் முகக் கவசத்தை சரியான முறையில் அணியுங்கள், எப்பொழுதும்



ஒரு மீற்றர் தூர இடைவெளியைப் பேணுங்கள். பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு குறைந்த நேரத்தைச் செலவிடுங்கள், பணப் பரிமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எப்போதும் குறித்தளவு பணத்தைச் செலுத்துவதற்கு ஆயத்தமாகப் பணத்தாள்கள் அல்லது நாணயங்களை வைத்திருங்கள், கொள்வனவு செய்த பொருள்களை முறையாகக் கழுவுங்கள் உதாரணமாக காய்கறிகள் பழங்கள் போன்றவற்றைக் கழுவுங்கள், வீடு திரும்பிய வுடன் ஆகக் குறைந்தது இருபது வினாடிகளுக்காவது கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுங்கள், பாவித்த முகக் கவசங்களைப் பாதுகாப்பான முறையில் மூடக்கூடிய குப்பைத் தொட்டி ஒன்றினுள் அப்புறப்படுத்துங்கள், உங்கள் மூக்கு வாய் மற்றும் கண்களை தொடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள், பொருள்களை அநாவசியமாகத் தொடுவதை தவிருங்கள்.

தடிமன், இருமல் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு வெளியே செல்ல வேண்டாம், சிறுவர்கள், 65 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் -என்றுள்ளது. (ஐ-159)

# முடக்க நிலை நீக்கப்பட்டாலும் அவதானமாயிருப்பது அவசியம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 9

மக்களின் வாழ்க்கையை இயல்புநிலைக்குக் கொண்டு வருதல் மற்றும் பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டு நாடு முடக்கத்திலிருந்து விடுவிக்கப் பட்டாலும் அதன் மூலம் மீண்டுமொரு அவதான நிலையை நோக்கியே நாம் செல்கின்றோம். எனவே இலங்கையை தொடர்ந்தும் பாதுகாப்பான நாடாக உறுதிப்படுத்துவது அனைவரதும் பொறுப்பாகும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வியாழக்கிழமை இனங்காணப்பட்ட 27 வைரஸ் தொற்றாளர்களில் 25 பேர் கடற்படை வீரர்களாவர். எஞ்சிய இருவரில் ஒருவர் கடற்படை வீரரின் உறவினரும் மற்றைய நபர்



வியாழனன்று டுபாயிலிருந்து விசேட விமானம் மூலம் நாடு திரும்பியவருமாவார். இவர் விமான நிலையத்தில் வைத்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது காய்ச்சல் அறிகுறி காணப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவர் நீர்கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை மூலம் அவர் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பது உறுதி செய்யப்பட்டது. இதிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று திரும்புபவர்கள் அனைவரும் நிச்சயம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. பி.சி. ஆர் பரிசோதனையில் இது உறுதிப்படுத்தப்பட்டாலும் சில சந்தர்ப்பங்களில் விடுபடக்கூடும். எனவே தனிமைப்படுத்துவதே சிறந்த வழிமுறையாகும்.

மேலும் எதிர்வரும் தினங்களில் நாடு வழமைக்குத் திரும்பவுள்ள நிலையில் மீண்டுமொரு அவதான நிலைக்கே நாம் செல்கின்றோம். இந்த சந்தர்ப்பங்களில் வைரஸ் பரவல் அதிகரிக்கக் கூடும். எனினும் பொருளாதாரம் மக்களின் வாழ்வாதாரம் என்பவற்றைக் கருத்தில் கொள்ளும்போது தொடர்ந்தும் நாட்டை முடக்க முடியாது. தனியார் நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்தும் எம்மால் வழங்கப்பட்டுள்ள சுகாதார பாதுகாப்பு ஆலோசனைகளை பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்பதை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றோம். இது அனைவரதும் பொறுப்பாகும் -என்றார். (ப)

# கடை உடைத்து பணம் திருட்டு

யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்தியில் உள்ள சைவ உணவகம் ஒன்றை உடைத்து உட்புகுந்த திருடர்கள் உணவகத்தில் கிருஸ்ணர் சிலைக்கு காணிக்கையாக வைத்திருந்த பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.

பலாலி வீதியில் பல்கலைக்கழகத்துக்கு செல்லும் வீதியிலேயே நேற்று பகல் இந்தத் திருட்டுச் சம்பவம் நடந்துள்ளது. தினமும் இரவில் பணியாளர்கள் கடையில் படுத்துறங்குவது வழமையாகும். நேற்று மாலை கடைக்குச் சென்றபோது உணவகத்தின் பின் கதவுகள் உடைக்கப்பட்டிருந்தன.

உடைக்கப்பட்ட உணவகத்தின் காசு மேசையில் இருந்த கிருஸ்ணர் சிலையுடனான கண்ணாடிப் பெட்டியில் 3 ஆண்டுகளாகப் போடப்பட்டுச் சேகரிக்கப்பட்ட பணம் திருடப்பட்டிருந்தது. காசு மேசைக்குள் இருந்த 2 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டிருந்தது. சுமார் 20 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் களவாடப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-105)

# அரச ஊழியர் மீது அடக்குமுறையை மேற்கொள்ள அரசு முயற்சிக்கின்றது

## முன்னாள் எம்.பி கருணாரத்ன பரணவிதாரண குற்றச்சாட்டு

கொழும்பு, மே 9

அரச ஊழியர்களின் ஊதியத்தை தியாகம் செய்யுமாறு கோரிக்கை விடுத்து அரச ஊழியர்கள் மீது அடக்குமுறையை மேற்கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருவதாக குற்றஞ்சாட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாரத்ன பரணவிதாரண இந்த விடயம் தொடர்பில் அலட்சியமாக இருக்காமல் இதற்கான தங்களது கருத்தை சமூக வலைத்தளங்கள் ஊடாகவாவது அரசாங்கத்துக்கும், நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட் 19 வைரஸ் பரவல் இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வராத நிலையில் மக்களது வாழ்கையை சவாலுக்குட்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதியே பொதுத்தேர்தலை நடத்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முயற்சித்தார். தொடர்ந்தும் வைரஸ் பரவலினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாத நிலையிலும் தேர்தலை நடத்த முயற்சித்து வருகின்றார். இதன் காரணமாக வைரஸ் பரவல் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் உண்மைத் தகவல்களை மறைத்து வருகின்றனர்.

வைரஸ் பரவலினால் ஏற்பட்டுள்ள நெருக்கடியான தருணத்திலும் அரச ஊழியர்கள் நாட்டுக்காக தங்களின் ஊதியத்தை தியாகம் செய்ய விரும்பாதிருக்கின்றனர் என்பதை நாட்டு மக்கள் மத்தியில் பரப்பி எதிர்வரும் காலங்களில் அரச ஊழியர்கள் தங்களது உரிமைகள் தொடர்பில் குரல் கொடுக்க முற்படும் போது அதைத் தடுத்தாற் கொள்ளவே அரசாங்கத்தால் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இதனால் இதனை அலட்சியப்படுத்தாது ஜனாதிபதிக்கும் நாட்டு மக்களுக்கும் ஊதியத்தை அர்ப்பணிப்பதில் தமக்குள்ள சிக்கல்கள் தொடர்பில் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தனிப்பட்ட சமூகவலைத்தளத்தைப் பயன்படுத்தியாவது தங்களது கருத்தை தெரியப்படுத்த வேண்டும் - என்றார். (ப)

# 32 தாதியர்களுக்கு தனியான கட்டடம்

கொழும்பு,மே 9

ஐ.டி.எச் மருத்துவமனையின் 32 தாதியர்கள் தங்குவதற்கான புதிய கட்டடம் திறக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியால் குறித்த கட்டடம் தாதியர்களிடம் கையளிக்கப்பட்டது.

15 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)



# 5,728 பேர் வெளியே 4,931 பேர் உள்ளே

கொழும்பு, மே 9

முப்படைகளால் நிர்வகிக்கப்படும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இருந்து இது வரை 5 ஆயிரத்து 728 பேர் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை நிறைவுசெய்து வீடு திரும்பியுள்ளனர் என்று கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்தும் விசேட நடவடிக்கை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

முப்படைகளால் நிர்வகிக்கப்படும் 39 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் 4 ஆயிரத்து 931 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதுவரை 390 கடற்படையினர் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன், அவர்கள் அனைவரும் முகாம்களுக்குள் இருந்தபோதே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

வெலிசறை கடற்படை முகாமில் இதுவரை 308 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனைய 82 தொற்றாளர்கள் வேறு பகுதிகளில் உள்ள முகாம்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நாட்டில் அடுத்த வாரம்

# முகக் கவசங்கள், கையுறை பாவனை அதிகரிக்கும்

கொழும்பு, மே 9

அரச மற்றும் தனியார் துறைகளின் பணிகளை மீள ஆரம்பிப்பதுடன், அடுத்த வாரத்தில், சுற்றுச் சூழலில் வெளியேற்றப்படும் முக கவசங்கள் மற்றும் கையுறைகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக, பொதுமக்கள் சத்திர சிகிச்சை முகக்கவசம் உள்ளிட்ட பல்வேறு வகையான முகக் கவசங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. எவ்வாறிருப்பினும், தற்போது வரை பயன்படுத்தப்படும் முகக்கவசங்களின் எண்ணிக்கை எவ்வளவு? என்பது தொடர்பான தகவல் மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை மற்றும் சுகாதார அமைச்சு என்பனவற்றிடம் இல்லை என்று அறிய முடிகின்றது. பயன்படுத்தப்பட்ட முகக் கவசங்கள் மற்றும் கையுறைகள் ஏனைய கழிவுகளைப் போன்று முகாமைத்துவம் செய்யவோ அல்லது மீள்சுழற்சிக்கு உட்படுத்தவோ முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# அதிகார அரசியல்வாதிகளுக்கு தேர்தல் வைரஸ் தொற்றியுள்ளது

## மேல் மாகாண முன்னாள் ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, மே 9

அதிகார அரசியல்வாதிகளுக்கு புதுவகையான தேர்தல் வைரஸ் தொற்றியுள்ளதால், கொரோனா வைரஸின் தாக்கத்தை அவர்கள் பெரிதாகப் பொருட்படுத்துவதாகவோ, கணக்கெடுப்பதாகவோ தெரியவில்லை என்று மேல் மாகாண முன்னாள் ஆளுநரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அஸாத் சாலி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

பொதுத் தேர்தலில் தாம் வெற்றிபெற வேண்டும். அதுவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற வேண்டும் என்பதில் கச்சிதமாகக் காய் நகர்த்தும் இவர்கள், பெரும்பான்மை சிங்கள வாக்குகளை குறிவைத்து முஸ்லிம்கள் மீது வஞ்சம் தீர்த்து வருகின்றார்கள். முஸ்லிம் ஜனாஸாக்களை எரித்துத்தான் ஆக வேண்டுமென அடம்பிடித்து, அதனைச் சரியாகச் செய்துவரும் இந்த சதிகாரக் கூட்டம், கொரோனா பிடிக்காத மட்டக்குளி பாத்திமாவையும் வேண்டுமென்றே எரித்துச் சாம்பலாக்கி விட்டார்கள். தகனக் கிரியைகளில் பாத்திமாவின் கணவர் உட்பட குடும்பத்தினர் பங்கேற்பதைத் தடுத்து, அவர்களை இழுத்துக்கொண்டு தனிமைப்படுத்தல் முகாமுக்குச் சென்ற கொடூரத்தை நாம் பார்க்கின்றோம்.

சுகாதார அதிகாரிகள் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரிகள் கூறுவதையும், எடுத்த முடிவுகளையுமே நடைமுறைப்படுத்துவதாகக் கூறும் அரசாங்கம், எப்போதாவது அதிகாரிகளுக்கு அடங்கி நடந்திருக்கின்றதா? முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு விடயத்தில் மட்டும் ஜே.எம்.ஓ தனியான ஆட்சி நடத்துவது போன்று முடிவெடுப்பதற்கு பின்புலம் என்ன? ராஜபக்சக்கள் அதிகாரமிழக்கும் போது இதற்கான உண்மைகள் வெளிவரும். இந்த அதிகாரிகள் அப்போது எரிப்பு விடயத்தில் பதில் கூறியே ஆகவேண்டும். முஸ்லிம்களை பலிகொடுத்து, அரசியல் பிழைப்பு நடத்துவதே இவர்களின் கேவலமாகிவிட்டது. தேர்தலுக்கு இவர்கள் அவசரப்படுவதன் நோக்கம், நாள்கள் கழியக்கழிய தற்போதைய அரசின் வண்டவாளங்கள் அம்பலத்துக்கு வந்து, மக்கள் மத்தியில் மதிப்பிழந்து, வாக்குகள் குறையும் என்ற அச்சமே யாகும் - என்றுள்ளது. (ப)

# வீடு உடைத்துத் திருடிய இருவர் பொலிஸாரால் கைது

கொடிகாமம், மே 9

மன்னார் கேரதீவு வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுக்குப் பூட்டிய கதவு மற்றும் மின் மோட்டர் என்பவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

திருடிச் சென்ற இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுக் கதவுகளும், மின் மோட்டரும் கைதடி விநாயகர் திருமண மண்டபத்துக்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

நாவற்குழி மன்னார் கேரதீவு வீதியில் ஐயனார் கோவிலடியில் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுக்குள் ஓடு பிரித்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டுக்கு பூட்டிய இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான கதவுகளை கழற்றி எடுத்ததுடன், அங்கிருந்த மோட்டரையும் திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கைதடி பகுதியைச் சேர்ந்த இருவரைக் கைதுசெய்தனர். திருடப்பட்ட பொருள்களையும் கைப்பற்றினர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ-159)

### சுகாதார முறைப்படி

# நாளை மறுதினம் சலூன்கள் திறக்கும்

கொழும்பு, மே 9

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படும் பகுதிகளில் உள்ள அழகு நிலையங்கள் மற்றும் சிகை அலங்கார நிலையங்களை எதிர்வரும் 11ஆம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவை சுகாதார அமைச்சால் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, முடிவெட்டுவது தவிர்ந்த ஏனைய முகங்களில் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அழகு நிலையங்களை திறப்பதற்கு முன் பிரதேசத்தில் உள்ள சுகாதார சேவைகள் அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டியது அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான முழுமையான தகவல்களை பெற்றுக்கொள்ள www.health.gov.lk என்ற இணையத்தளத்துக்கு பிரவேசிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ப)

# பங்குச் சந்தையை திறக்க நடவடிக்கை

கொழும்பு, மே 9

கொழும்பு பங்குச்சந்தை (CSE) நடவடிக்கைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொரோனா தாக்கம் காரணமாக மூடப்பட்டிருந்த கொழும்பு பங்குச்சந்தை நீண்ட நாள்களின் பின்னர், நாளை மறுதினம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. மே 11 ஆம் திகதி முதல் அரச, தனியார் துறை செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான அரசாங்கத்தின் பணிப்புரைக்கமைய இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதன் அடிப்படையில் பங்குச் சந்தையின் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

காலை 11 மணி முதல் பகிரங்க ஏல விற்பனை நடவடிக்கைகள் நடைபெறும், அதன்பின் வழமையான விற்பனை நடவடிக்கைகள் தொடரும். பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு பங்குச்சந்தை மூடப்படும் எனவும் பங்குச் சந்தை வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)



# ஊரடங்கை மீறினரென 1,059 பேர் மேலும் கைது

கொழும்பு, மே 9

ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டின் கீழ் மேலும் ஆயிரத்து 59 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் 249 வாகனங்களையும் பொலிஸார் பொறுப்பேற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இதேவேளை, இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் 49ஆயிரத்து 784 பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, 12 ஆயிரத்து 903 வாகனங்களையும் பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ப)

# அரசமைப்பை மீறினார் கோத்தா

## மங்கள சாடல்

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அமெரிக்க குடியுரிமை அற்றவரென அமெரிக்கா இப்போது அறிவித்துள்ள சூழ்நிலையில் , அவர் இலங்கை அரசமைப்பை மீறிவிட்டார் என்று முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தனது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார். “இரட்டை குடிமகனாக இருக்கும் போது அரசியலமைப்பை மீறி கோத்தாபய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசமைப்பை அவர் தொடர்ந்து அவமதித்திருப்பது இப்போது அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது” என்று அவர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.(க)

# மக்களுக்கான வழிகாட்டல் மும்மொழிகளில் வெளியீடு

கொழும்பு,மே 9

ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் பொதுமக்கள், எவ்வாறு செயற்படவேண்டுமென்பது தொடர்பில் சுகாதார அமைச்சினால் மும்மொழிகளுடன் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது,

வைரஸ் தொற்று காலத்துக்கு முன்பு போல் அல்லாமல், அதன் பின்னர் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை நாம் சிந்தித்து செயல்படுவது அவசியம். முக்கியமாக அரச ,அரச சார்பற்ற மற்றும் ஏனைய நிறுவனங்கள் கைத்தொழில் துறை நிறுவனங்கள் உட்பட அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோருக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் இணையதளத்திலும், பிரதமர் அலுவலக இணையத் தளத்திலும் அவற்றைப் பார்வையிட முடியும். இந்தத் தகவலை அறியவில்லை எனக் கூறி தட்டிக்கழிக்க முடியாது. இந்த விடயங்களில் தெளிவில்லை என்றால், அதிகாரிகள் குழு அதனைத் தெளிவுபடுத்தத் தயாராக உள்ளனர்- என்றார். (க)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 09.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.